உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை,
(Regd.)
கும்பகோணம்
=========

ப்ரசுரம் 43

# வைதிக மதம்

பாரத நாட்டில் பல்லாயிரம் வருஷங்களாக் குருமுகமாகவே கற்கப்பட்டுவரும் நூல் **வேதம்** ஆகும். அது ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வவேதம் என நான்கு வகைப்படும். அதர்வவேதத்திற்கு ஆதர்வணவேதம், அதர்வாங்கிரஸ், ப்ருகுவிஸ்தரம், ப்ரு வாங்கிரஸ்ஸம் என்ற மற்ற பெயர்களும் உண்டு. வேதம் என்பது **மந்த்ரத்தையும் ப்ராஹ்மணத்தையும்** குறிக்கும். தேவதைகளை வணங்கி அழைத்தற்கு **மந்த்ரங்கள்** உபயோகப்படுத்தப்படுகின்றன. **ப்ராஹ்மணங்கள்** மந்த்ரங்கட்கு வ்யாக்யானம் போன்றவை. ஒவ்வொரு வேதத்திலும் மந்த்ரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அத்தொகை நூலிற்கு **ஸம்ஹிதை** என்று பெயர். ருக் மந்த்ரங்கள் ருக்வேத ஸம்ஹிதையிலும், யஜுர்மந்த்ரங்கள் யஜுர்வேத ஸம்ஹிதையிலும், ஸாமமந்த்ரங்கள் ஸாமவேத ஸம்ஹிதையிலும், அதர்வ மந்த்ரங்கள் அதர்வவேத ஸம்ஹிதையிலும் காணப்படுகின்றன.

ருக் மந்த்ரங்கள் ருக் ரூபமாய் உள்ளன. ருக் என்பதை **வைதிகச் செய்யுள்** எனலாம். யஜுர் மந்த்ரங்கள் **யஜுஸ்** ரூபமாய் உள்ளன. யஜுஸ் என்பதை **வைதிக வசனம்** என்று சொல்லலாம். ஸாம மந்த்ரங்கள் ஸாம ரூபமாய் உள்ளன. ஸாம என்பதை வைதிக கீதம் என்று சொல்லலாம். அதர்வ மந்த்ரங்கள் பெரும்பாலும் ருக் ரூபமாகவே உள்ளன.

ஒவ்வொரு வேதத்திலுள்ள ப்ராஹ்மணங்கள் பெரும்பாலும் வசன நடையிலேயே இருக்கின்றன. அவற்றின் முதற் பகுதி மந்த்ரங்களின் பொருள், வினியோகம் முதலியவற்றை விரிவாகக் கூறுகின்றது. இரண்டாம் பகுதி வானப்ரஸ்தர்களின் தர்மத்தைக் கூறுக்கின்றது; அக்காரணம் பற்றி அது **ஆரண்யகம்** எனவுங்கூறப்படும். மூன்றாம் பகுதி ஒருவன் குருவை அடைந்து ஆத்மாவின் ஸ்வபாவத்தை அறிந்து மோக்ஷம் அடையும் உபாயத்தைக் கூறுகின்றது. அதற்கு **உபநிஷத்** என்ற பெயரும் உண்டு. அந்த உபநிஷத்துக்கள் பல உள்ளன. அவற்றுள் எட்டு,பத்து சிறந்தன ஆகும். ஈசாவாஸ்யம், கடோபநிஷத், முண்டகம் இவை செய்யுள் வடிவத்தைக் கொண்டன. எஞ்சியவை பெரும்பாலும் வசன நடையில் உள்ளன. ஈசாவாஸ்யம் சுக்ல யஜுர்வேத ஸம்ஹிதையின் இறுதிப் பாகமாகையால் அதனை **மந்த்ரோபநிஷத்** என்றுஞ் சொல்லுவது உண்டு. வேதங்களில் யாகம் முதலிய கர்மாக்களைக் கூறும் பகுதிக்குக் **கர்மகாண்டம்** என்றும், ஞானத்தைப்பற்றிக் கூறும் பகுதிக்கு **ஞானகாண்டம்** என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வேதங்கள் குருமுகமாக் கற்கப்பட்டு வந்தமையால், ஆங்கு வழங்கப்பட்ட சொற்கள் பிழைபடாமல் இருக்கவேண்டும். அச்சொற்கள் எழுத்துக்களால் ஆக்கப்பட்டமையால், எழுத்தின் இலக்கணம் எழுதவேண்டுவது அவசியம் ஆயிற்று. இதனை, சிக்ஷை என்று கூறுகின்றனர். அங்கு எழுத்துக்களின் வகை, பிறப்பு, புணர்ச்சியில் அவற்றிற்கு நேரும் மாறுதல்கள், முதலியன உணர்த்தப்படுகின்றன. சொற்கள், பகுதி விகுதி இவற்றால் ஆக்கப்பட்டதாகக் கொள்ளப்பட்டமையால், அவற்றின் தன்மையை அறியச் சொல்லிலக்கணம் வேண்டியதாயிற்று. அதனை வ்யாகரணம் என்று கூறுகின்றனர்.

ருக்வேத ஸம்ஹிதை, அதர்வவேத ஸம்ஹிதை, கடோபநிஷத் முதலியன செய்யுள் வடிவத்தை கொண்டமையாலும், செய்யுள்கள் பலவகையாக இணைக்கப்பட்டமையாலும், செய்யுளின் இலக்கணம் வேண்டியதாயிற்று. அதனை சந்தஸ் என்பர். சொற்களின் பொருள் நன்கு விளங்காவிட்டால், வேதப்பொருளை அறிதல் முடியாது. மந்த்ரங்களின் பொருள் தெரியாமற் போனால், அவற்றை நன்கு கூறுவதற்கு இயலாது. ஆதலின் வைதிகச் சொற்களின் பொருளை விளக்க நூல் வேண்டியதாயிற்று. அந்நூலிற்கு நிருக்தம் என்று பெயர்.

வேதத்திற் கூறப்பட்ட கர்மாக்கள் குறிப்பிட்ட காலங்களில் செய்யப்பட வேண்டும் என அங்கே கூறப்பட்டுள்ளது. அந்தந்தக் காலத்தை அறிய வானநூலின் அவச்யம் ஏற்பட்டது. அந்த நூலிற்கு ஜ்யோதிஷம் என்று பெயர்.

யாகங்கள் செய்யப்படவேண்டும் என்று வேதத்திற் சொல்லப்பட்டது. ஒவ்வொரு யாகத்தையும் ஒவ்வொரு முறையில் நடத்தினர். பிற்காலத்தில் அம்முறையை நூல்களில் எழுதினால் சௌகர்யமாயிருக்கும் என நினைத்து நூல்களை இயற்றினர். அந்நூல்களுக்கு கல்பஸூத்ரம் என்று பெயர்.

வேதங்களில் கூறப்பட்ட யாகங்களைப் பற்றிய நூல்களைப் போலவே, ஸ்ம்ருதியில் விவாஹாக்னியில் செய்யப்படவேண்டும் என்ற கர்மாக்களைப் பற்றியும் நூல்கள் இயற்றினர். அந்நூல்களுக்கு க்ருஹ்யஸூத்ரம் என்று பெயர்.

இவற்றைத்தவிரப் பொதுவாக வர்ணங்களுடைய தர்மம், ஆச்ரமங்களுடைய தர்மம், வேதாத்யயனம் செய்யவேண்டிய முறை, தாயவிபாகம், ஆசௌசநிர்ணயம் இவற்றைப் பற்றி நூல்கள் இயற்றினர். அவற்றிற்குத் தர்மஸூத்ரம் என்று பெயர்.

இம்மூன்று வகைப்பட்ட நூல்களையும் கல்பஸூத்ரம் என்ற பெயரால் குறிக்கத் தலைப்பட்டனர். அப்போது யாகங்களைப் பற்றிய நூல்களுக்கு ச்ரௌத ஸூத்ரம் என்ற பெயர் இட்டனர் எனக்கொள்ளல் தகும்.

சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம் ,ஜ்யோதிஷம், கல்பம் இவ்வாறும் ஒவ்வொரு வகையால் வேதங்களைக் காக்கப் பயன்பட்டதால், இவ்வாறனையும் வேதாங்கங்கள் என்று கூறினர்.

வைதிக சிக்ஷைக்கு ப்ராதிசாக்யம் என்ற பெயரும் உண்டு. வேதங்களில் ஒவ்வொரு சாகைக்கும் ஒவ்வொரு சிக்ஷை இருந்திருக்கவேண்டும் என்பதை இப் பெயரே காட்டிக்கொடுக்கின்றது. ஆனால் இப்போது மிகச் சில ப்ராதிசாக்யங்களே வழக்கில் உள்ளன.

சாகை என்றால் என்ன? சாகை என்பதற்குக் கிளை என்பது பொருள். ஒவ்வொரு வேதமும் பல ருஷிகளால் தத்தம் குடும்பத்தில் அத்தியயனம் செய்யப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்திலும் அத்தியயனஞ் செய்யப்பட்டது ஒவ்வொரு சாகையாகக் கொள்ளப்பட்டிருக்கலாம். ருக் வேதத்தில் 21-சாகைகளும், யஜுர் வேதத்தில் 10- சாகைகளும், ஸாம வேதத்தில் 1000-சாகைகளும், அதர்வ வேதத்தில் 9-சாகைகளும் இருந்தன என்பர். தற்போது வழக்கில் உள்ளவை மிகச்சிலவே ஆகும்.

வைதிக வ்யாகரணங்கள் குறைந்தது எட்டாவது இருந்திருக்கவேண்டும்; ஏனெனில் ஆசிரியர் பாணினியாரின் வ்யாகரணம் ஒன்பதாவது எனவும், அது வந்த பிறகு மற்றவை இறந்தன எனவும் முன்னோர் கூறுவர். இந்த்ரனால் ஒரு வ்யாகரணம் இயற்றப்பட்டது என்பது வேதத்திலிருந்தும், ப்ருஹஸ்பதியால் சப்தபாராயணம் என்ற நூல் செய்யப்பட்டது என்பது மஹாபாஷ்யத்திலிருந்தும் அறியப்படுகின்றன. வேதத்தில் வழங்கப்பட்ட பாஷைக்கும் ஆசிரியர் பாணினியார் காலத்தில் வழங்கப்பட்ட ஸமஸ்க்ருத பாஷைக்கும் பல வேறுபாடுகள் காணப்பட்டன. முன்னர் உள்ளதை வைதிகம் என்றும், பின்னருள்ளதை லௌகிகம் என்றும் கூறி, இரண்டிற்கும் பொருந்த அவர் இலக்கணம் செய்தனர். அந்நூலிற் கொள்ளப்பட்ட முறை உலகத்தாராற் போற்றக்கூடியது.

வைதிகச் சந்தஸ்ஸைப்பற்றி தைத்திரீய ஸம்ஹிதையிலும், ஸாங்க்யாயன ச்ரௌத ஸூத்ரத்திலும், ஸாமவேத நிதான ஸூத்ரத்திலும், காத்யாயன ஸர்வானுக்ரமணியிலும் சிறிது கூறப்பட்டது. அவற்றை விரிவாகக் கூறும் பழைய நூல் ஒன்றும் இப்போது இல்லை. பிங்களரின் சந்தஸ் சாஸ்த்ரம் பிற்காலத்தில் வந்தது.

நிருக்த நூல்கள் பல இருந்தன என்பது இப்போது இருக்கும் யாஸ்கருடைய நிருக்தத்திலிருந்து அறியப்படுகின்றது.

ஜ்யோதிஷத்திலும் கல்பஸூத்ரங்களிலும் சிற்சிலவே உள்ளன. முன்னர் இருந்த தர்ம ஸூத்ரங்களை ஒட்டி மனுஸ்ம்ருதி முதலியன எழுதப்பட்டன.

வேதங்களின் கர்மகாண்டத்தில் உள்ள வாக்யங்களின் விசாரத்தை ஜைமினியும், ஞானகாண்டத்தில் உள்ளனவற்றின் விசாரத்தைப் பாதராயண வ்யாஸரும் ஸூத்ர ரூபமாய் எழுதினர். முன்னதற்குப் பூர்வமீமாம்ஸை என்றும் பின்னதற்கு உத்தரமீமாம்ஸை என்றும் பெயரிட்டனர்.

யுக்தி பூர்வமாய்ப் பொருளை நன்கு அறிவதற்கு நியாய ஸூத்ரம் கௌதமரால் எழுதப்பட்டது.

உலகத்தில் மக்கள் தர்மத்தை நன்கு அறிய வால்மீகி ராமாயணத்தையும், வ்யாஸர் மஹாபாரதம், புராணங்கள் இவற்றையும் இயற்றினர்.

இவை எல்லாம் வைதிக தர்மத்தை நாம் அறியப் பயன்படும் நூல்கள். இவற்றைப் பதினான்கு வித்யை என்பர்.

அங்கானி வேதாச்ரசத்வாரோ மீமாம்ஸா நியாயவிஸ்தர: ।
தர்மஷாஸ்த்ரம் புராணம் ச வித்யா ஹ்யேதாச்ரசதுர்தஷ ॥

மக்கள் ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன் என நால்வகையாகப் பிரிக்கப்பட்டனர். ஆதிகாலத்தில் மேலே கூறப்பட்டவரை மேல் ஜாதியர் என்றும் கீழே கூறப்பட்டவரைக் கீழ் ஜாதியர் என்றும் கூறியிருத்தல் கூடும் என்பது, ப்ராஹ்மணன் தன்னைப் பிறரைக் காட்டிலும் சிறந்தவன் என நினைத்தால் உடனே ப்ராஹ்மண்யம் போய்விடும் என்ற தர்ம ஸூத்ர வாக்யத்தால் விளங்குகின்றது. அந்நான்கு வர்ணத்தாருள், முதல் மூன்று வர்ணத்து ஆண் மக்கட்கும் கீழுள்ள வர்ணத்துப் பெண் மக்கட்கும் பிறந்தோர் அனுலோம ஜாதியர் எனக் கூறப்பட்டனர். மேல் வர்ணத்துப் பெண் மக்கட்கும் கீழ் வர்ணத்து ஆண் மக்கட்கும் பிறந்தவர் ப்ரதிலோம ஜாதியர் எனக் கூறப்பட்டனர்.

அவருள் ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைச்யன் இம்மூவரும் உபநயனம் செய்விக்கப்பட்டு வேதத்தைக் குருமுகமாக கற்பிக்கப்பட்டனர். வேதாத்யயனம் செய்வதால் அவர்கள் ருஷிகளுக்குச் செலுத்தவேண்டிய கடனைச் செலுத்தியதாகக் கருதப்பட்டனர். பின்னர் விவாஹஞ் செய்து கொண்டு அக்னிஹோத்ரம், யாகங்கள் முதலியவற்றைச் செய்தனர். இவற்றால் அவர்கள் தேவர்கட்குச் செலுத்தவேண்டிய கடனைச் செலுத்தியதாகக் கருதப்பட்டனர். அந்நிலையில் அவர்கள் ப்ரும்மசாரி, ஸந்யாஸி முதலியோரை உபசரித்து, வந்த விருந்தினரைப் போற்றி, மனைவி மக்களோடு வாழ்ந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆண்மகனைப் பெற்றால்தான், அவர்கள் பித்ரு தேவதைகட்கு செலுத்தவேண்டிய கடனைச் செலுத்தியதாகக் கருதப்பட்டனர். அதற்காக, ஒரு ஆண் மகன் பிறக்கும் வரையில் மனைவியின் ருதுகாலத்தில் கணவன் அவளைச் சேரவேண்டும் என்ற விதி பிறந்தது.

அவரவரது மகன் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தகுந்த நிலையில் வந்ததையும் அவனுக்கு மகன் பிறந்ததையும் கண்டவுடன் அவர் வானப்ரஸ்தர் ஆயினர். அந்நிலையில் மனைவி அவரோடு வரின் அவளையுங் கூட்டிச் சென்றனர். அவள் வராவிட்டால் அவளை மகனிடம் விட்டுவிட்டுத் தாமே சென்றனர். இந்நிலையில் அவர் காட்டில் வசித்தனர். அக்னி கார்யம் சிறிது செய்தனர். பழம், வேர் இவற்றை உண்டு தவஞ் செய்வதில் காலத்தைக் கழித்தனர்.

பின்னர் எல்லாப் பிராணிகளும் பரமாத்ம ஸ்வரூபம் என்ற எண்ணம் நிச்சயமாக வந்த பிறகு, அக்னிகார்யத்தை விட்டு, ஸந்யாஸம் பெற்று, ஆத்மஸ்வரூபத்தை அறிவிக்கத்தகுந்த ஆசிரியனை நாடி, ஆத்மவிசாரம் செய்து, மனனம் நிதித்தியாஸனம் செய்து, மோக்ஷம் அடைந்தனர். அவருடைய ஜீவன் அவரது உடலைவிட்டு நீங்குவதற்கு முன் மோக்ஷத்தை அடைந்தால், அதனை ஜீவன்முக்தி என்று சொல்லுவர்.

ப்ராஹ்மணனுக்கு வேதங்களை கற்றல், பிறருக்கு கற்பித்தல், யாகங்களைச் செய்தல், பிறருக்கு அவற்றைச் செய்வித்தல், தானங் கொடுத்தல், அதனைப் பெற்றுக்கொள்ளுதல் என்று ஆறு தொழில்கள் விதிக்கப்பட்டன.

ஸ்வாத்யாயோ யஜனம் தானம் தஸ்ய தர்ம இதி ஸ்திதி: ।
கர்மாண்யத்யாபனம் சைப யாஜனம் ச ப்ரதிக்ரஹ: ॥

தானத்தை ஏற்கும்போது பணத்தைச் சேர்க்கவேண்டும் என்ற எண்ணமில்லாமற் குடும்பச் செலவிற்கு வேண்டியனவே கொள்ள வேண்டும். முற்காலத்தில் அவன் நான்கு வேதங்களையுங் கற்றான். ஒவ்வொன்றையும் பன்னிரண்டு வருஷங்களில் அத்தியயனம் செய்தான்.

க்ஷத்ரியனுக்கு வேதத்தைக் கற்றல், யாகஞ் செய்தல், தானமளித்தல், ப்ரஜைகளைக் காத்தல், குற்றத்திற்குத் தண்டித்தல் என்ற ஐந்து தொழில்கள் விதிக்கப்பட்டன.

வைச்யனுக்கு வேதத்தைக் கற்றல், யாகஞ் செய்தல், தானமளித்தல், பசுவை பாதுகாத்தல், உழவு, வ்யாபாரம் முதலியன செய்தல், இவை விதிக்கப்பட்டன.

சூத்ரனுக்கு உழவு, தச்சு முதலிய தொழில்கள், சில்பம், நாட்யம், ப்ராஹ்மணன் முதலியவர்களுக்கு வழிபாடு முதலியன விதிக்கப்பட்டன.

சூத்ரனுக்கு வேதத்தைக் கற்றல் விதிக்கப்படவில்லையாதலின் அவனுக்கு உபநயனம் இல்லை. ப்ராஹ்மணன் முதலிய மூவர்க்கும் அது விதிக்கப்பட்டமையால் அவர்களுக்கு உபநயனம் உண்டு. அக்காரணம் பற்றி அம்மூவர்க்கும் த்விஜ: என்று பெயர். த்ரயோ வர்ணா த்விஜாதய: அதற்கு இரு பிறப்பையுடையோன் என்பது பொருள். இரண்டாம் பிறப்பில் காயத்ரீ தாயாகவும் ஆசிரியன் தந்தையாகவும் இருப்பார். ஆதலின் காயத்ரீ மந்த்ரத்தை அவர்கள் இடைவிடாது ஜபம் செய்தல் அவச்யமாகும். காலையிலும் மாலையிலும் காயத்ரீ மந்த்ரத்தை 1000 முறை அல்லது 100 முறை அல்லது 10 முறையாவது ஜபிக்கவேண்டும். அதனால் அவனுடைய பாபம் போகும். அவனுக்கு அனுகூலம் இல்லாத க்ரஹங்களால் துன்பம் நேராது.

ஒருவன் இறக்கும் போது பூதவுடலிலிருந்து வெளியே செல்லும்படி செய்பவனை **யமன்** என்று கூறுவர். இறந்த பின்னர் ஜீவன் நல்வினைப் பயனை மாத்திரம் அனுபவிக்க வேண்டுமாயின் ஸ்வர்க்கத்துக்குச் செல்லுகிறான். தீவினைப்பயனை மாத்திரம் அனுபவிக்க வேண்டுமாயின் நரகத்திற்குச் செல்லுகிறான். அவன் செல்ல ஸாதனமாயிருப்பபது அவன் மகன் செய்யும் ப்ரேதச்சடங்கு ஆகும்.

அன்றியும் பித்ருலோகத்தில் உள்ள தேவதைகளுக்கு உணவு ச்ராதத்தில் மக்கள் இடும் பிண்டம் முதலியன ஆகும். அக்காரணத்தால் ஒரு ஆண் மகனைப்பெறுதல் பித்ருக்களுக்குத் தீர்க்கவேண்டிய கடன்.

ஸ்வர்கத்தில் இருப்பவர்கள் தேவர்கள். அவர்களுடைய அரசன் இந்த்ரன். அவர்களுக்கு உணவு பூலோகத்தில் மக்கள் செய்யும் ஹோமம். மக்கள் ஒரு தேவதையைக் குறித்து ஒரு பொருளை அக்னியில் ஹோமம் செய்தால், அதனை அக்னி அத்தேவதையிடம் சேர்ப்பித்துவிடுவன். மக்கள் செய்யும் உதவியை நினைத்து, தேவர்கள் மக்கட்கு மழையைப் பொழிவிக்கின்றனர்.

தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் அடிக்கடி சண்டை வரும். அப்போது தேவர்கள் ப்ரும்மாவையும், விஷ்ணுவையும், சிவனையும் உதவி செய்ய வேண்டுவர்.

தேவதைகளுக்கு வலுவைக் கொடுப்பது ஸோமரஸம். அதற்காக மக்கள் ஸோமயாகத்தைச் செய்தனர். ஸோமயாகம் ஏழு வகைப்படும். யாகங்களில் ருத்விக்குகள் பதினாறுபேர். அவருள் சிறந்தவர் ஹோதா, அத்வர்யு, உத்காதா, ப்ரும்மா என்பவர். ஹோதா தேவதைகளைக் குறித்து மந்த்ரங்களைக்கூறுவர். அத்வர்யு ஹோமம் முதலியவற்றைச் செய்வர். உத்காதா தேவதைகளைக் குறித்து ஸாமகானம் செய்வர். ப்ரும்மா அவரெல்லாம் பிழை செய்யாமல் அவரவருடைய வேலைகளைச் செய்கின்றாரா எனக் கவனிப்பர்.

ப்ரும்மா, விஷ்ணு, சிவன், துர்க்கை, பலராமன், ஸ்கந்தன் முதலிய தெய்வங்களைப்பற்றி விரிவாக ராமாயணம், மஹாபாரதம், புராணங்கள் கூறுகின்றன.

ப்ரும்மா :- இவர் மஹாவிஷ்ணுவின் கொப்பூழில் தோன்றியதாமரையிற் பிறந்தவர். அவருக்கு முகங்கள் நான்கு. அவர் தாமரைமேல் வீற்றிருப்பார். அவரே உலகத்தைப் படைப்பவர். அவரைக் குறித்துத் தவஞ்செய்து பலம் அடைந்த அஸுரர் பலர்.

விஷ்ணு :-. இவர் மூன்று அடிகளால் மூன்று உலகங்களையும் அளந்தார் என ருக்வேதம் கூறுகின்றது. அஸுரர்கள், ராக்ஷஸர்கள் இவர்களுடைய கொடுமையைத் தாங்கச் செயலற்ற தேவர்களைக் காக்க உலகிற் பல அவதாரங்கள் எடுத்தவர். ப்ரஹ்லாதன் என்ற பக்தனைக் காத்தவர். நீலமேக ச்யாமளர். கைகளில் சங்கு சக்ரங்களையும், மார்பில் மாலையையும் கொண்டவர். பீதாம்பரத்தை உடுத்தவர். புண்டரீகாக்ஷன். கருடக்கொடியோன் எனக் கூறப்படுவர். லஷ்மிக்குக் கணவன். த்ரிபுரத்தைச் சிவன் அழிக்கும்போது தாம் அவருக்கு அம்பு ஆயினர்.

சிவன் :- இவரை முக்கண்ணன், விஷ்முண்டோன், நீலகண்டர், சந்த்ரசேகரன், காலனைக் காய்ந்தவன், பார்வதீபதி, முருகன்தந்தை, ஆலமரத்தடியில் இருப்போன், கைலாஸாதிபதி, த்ரிபுரமெரித்தோன், நால் வேதத்திற் கூறப்படுவோன், வ்ருஷப வாஹனன், பரசுஹஸ்தன் என நூல்கள் கூறுகின்றன.

பலராமன் :- இவரை ஹலாயுதன், பால்வர்ணன், நீலாம்பரன், பனைக்கொடியோன், அச்யுதாக்ரஜன் என நூல்கள் கூறுகின்றன.

துர்க்கை:- இடையூறுகளை நீக்குவதற்கும், கார்யம் விரும்பியவாறு நடைபெறுதற்கும் துர்க்கையை வழிபட்டனர்.

ஸ்கந்தன்:- மணம் நிகழ்ந்த பின்னர்ச் சிவபிரானும் பார்வதியும் உல்லாஸமாக இருந்தனர். அப்போது அவருக்கு மகன் உண்டானால் அவன் உலகத்தை எல்லாம் ஜயித்து தன்னையும் அடக்கிவிடிவான் என்ற பயம் இந்த்ரனுடைய மனதில் தோன்றியது. உடனே தேவர்களுடன் ப்ரும்மாவை முன்னிட்டுக்கொண்டு அவன் சிவனிடம் சென்று, தன் வேண்டுகோளை அறிவித்தனன். சிவனும் உடன்பட்டனர். ஆனால் ரேதஸ்ஸின் ஒரு பகுதி சிதறி அக்னியில் விழுந்தது. அதனை ஹவிஸ்ஸாகக் கொண்டு ஸப்த ருஷிகளும் யாகஞ் செய்தனர். அதன் சேஷத்தை ரிஷிபத்னிகளை உண்ணவேண்டினர். அருந்ததி தவிர மற்ற ஆறு பத்னிகளும் அதனை உண்டு ஆறு குழந்தைகளைச் சரவணத்தில் பெற்றனர். பிறகு அங்கே விட்டு விட்டுச் சென்றனர். அப்போது சிவனும் பார்வதியும் ஆகாய மார்க்கமாய் வரும்போது, பார்வதி அக்குழந்தைகளைப் பார்த்தாள். அவை யாருடையன எனக் கணவனைக்கேட்டாள். அவளுடையனவே என அவர் விடை அளித்தனர். உடனே கீழே சென்று அக்குழந்தையை எடுத்தனள். அக்குழந்தையே தேவருடைய ஸேனைகளுக்குத் தலைவன் ஆகித் தாரகாஸுரனை அழித்தது. அக்குழந்தையைப் பார்க்க மும்மூர்த்திகளும் முப்பத்துமூன்று தேவர்களும் வந்து, ஒவ்வொருவரும் ஒரு விளையாட்டுக்கருவி கொடுத்தனர்.

ஒவ்வொரு மக்களும் தற்போது அனுபவிக்கும் நன்மை தீமைகளுக்கு அவரவர் முற்பிறப்புக்களிற் செய்த நற்செயலும் தீச்செயலுமே காரணம் ஆகும். ஆதலின் பின்னர் நல்ல நிலையில் இருக்கவேண்டுமானால் இப்போது நற்செயல்களையே செய்தல் வேண்டும்.

விதிர்ஹி பலவான் தேவி துஸ்த்யஜம் வை புராக்ருதம் ll
ஜீவா: புராக்ருதேனைவ திர்யக்யோனிஸரிஸ்ருபா: l
நாநாயோனிஷு ஜாயன்தே ஸ்வகர்மபரிவேஷ்டிதா: ll
யாத்ருஷம் கர்ம குருதே தாத்ருஷம் ப்ஹலமஷ்னுதே ll
ஏவம் விஞ்ஞாததத்வாஸ்தே தானதர்மபராயணா: l
ஷுபானி விதிவத் க்ருத்வா காலதர்மகதா: புன: ll
தானி தானப்ஹலான்ஏவ புஞ்ஜதே ஸுகபோகின: ll

[ மஹாபாரதம் ]

கடவுள் எங்கும் இருக்கிறார். எப்பொருளிலும் ஆதாரமாயிருக்கும் பொருள் அவரே. அவித்யையால் வெவ்வேறாக தோன்றுகிறார். அந்த அவித்யையைப் போக்குவதே மக்களுடைய கடமை. அவித்யை நீங்கின் ஸ்வப்ரகாசமான பரம்பொருளாகவே ஒவ்வொருவரும் தோன்றுவர். அதற்குப் பெரும் தடையாய் உள்ளது ஆசையே ஆகும். அவ்வாசை தானே நீங்குமாறு ஒவ்வொருவரும் முயலவேண்டும். ஆசை முற்றிலும் நீங்கினால் அப்போதே அவர் முக்தி பெறுவர். ஜீவன் இந்த பூதவுடலில் இருக்கும்போதே ஆசை முற்றிலும் நீங்கினால் அப்போது அடையப்படும் முக்தியை ஜீவன் முக்தி என்று கூறுவர்.

யதா ஸர்வே ப்ரமுச்யன்தே காமா யேஸ்ய ஹ்ருதி ச்ரிதா: l
அத மத்யோர்ம்ருதோ பவத்யத்ர ப்ரம்ஹ ஸமஷ்னுதே ll
பர்யாப்தகாமஸ்ய க்ருதாத்மனஸ்து இஹைவ ஸர்வே
ப்ரவிலீயன்தி காமா: l
யோகாமோ நிஷ்காம ஆப்தகாம ஆத்மகாமோ ந தஸ்ய ப்ராணா
உத்க்ராமன்தி ப்ரஹ்மைவஸன் ப்ரஹ்மாப்யேதி l
ந ஜாது காம: காமாநாமுபபோகேன ஷாம்யதி l
ஹவிஷா க்ருஷ்ணவர்த்மேவ பூய ஏவாபிவர்ததே ll
யோ ந காமயதே கிஞ்சின் கிஞ்சிதவமன்யதே l
இஹ லோகஸ்த ஏவைஷ ப்ரஹ்மபூயாய கல்பதே ll

இப்படிக்கு,
வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையோம்.